| அனுப்புநர் | பெறுநர் |
|---|---|
| திருமதி.ந.லதா,<br>அரசுத் தேர்வுகள் இயக்குநர்,<br>சென்னை – 600 006. | அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்,<br>இணை இயக்குநர் (கல்வி), புதுச்சேரி,<br>அனைத்து அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள். |

**ந.க.எண்.013041/எச்.1/2024** **நாள் : 30.08.2024**

**ஐயா/ அம்மையீர்,**

**பொருள் :** சென்னை-6, அரசுத் தேர்வுகள் இயக்ககம் – 2024-2025 மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வு – மாணவர்களது பெயர்ப்பட்டியலை பதிவிறக்கம் செய்தல் மற்றும் திருத்தங்கள் மேற்கொள்ளுதல் – சார்பு.

*****************

நடைபெறவுள்ள 2024-2025 மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்விற்கான பள்ளி மாணவர்களின் பெயர்ப்பட்டியல், மார்ச்/ஏப்ரல் 2024 மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வெழுதிய பள்ளி மாணவர்களின் பெயர்ப்பட்டியலினை (Nominal Roll) அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்படவுள்ளது. எனவே, இது குறித்தான பின்வரும் அறிவுரைகளை அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களும் தங்களது ஆளுகைக்குட்பட்ட அனைத்து மேல்நிலை பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு அனுப்பி வைத்திடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

அனைத்து மேல்நிலை பள்ளித் தலைமையாசிரியர்களும் **04.09.2024 பிற்பகல் முதல்** www.dge.tn.gov.in என்ற இணையதள முகவரிக்கு சென்று, தங்கள் பள்ளிக்கு அரசுத் தேர்வுகள் இயக்ககத்தால் வழங்கப்பட்டுள்ள USER ID மற்றும் Password-ஐ பயன்படுத்தி, மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வெழுதவுள்ள தங்களது பள்ளி மாணவர்களின் நிரந்தரப் பதிவெண், பெயர், பிறந்த தேதி, பாடத்தொகுதி உள்ளிட்ட விவரங்கள் அடங்கிய **பட்டியலை பதிவிறக்கம் செய்து கொள்ள வேண்டும்.**

1. பதிவிறக்கம் செய்யப்பட்ட மாணவர் விவரம் அடங்கிய பட்டியலில், தங்கள் பள்ளியில் +2 பயிலும் மாணவர்களது பெயர் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் (Initial and Spelling Mistake only), புகைப்படம் மற்றும் பிறந்த தேதி ஆகியவற்றில் திருத்தங்கள் இருப்பின், அதன் விவரங்களை பத்தாம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழின் நகலுடன் இணைத்து 10.09.2024 தேதிக்குள் சம்பந்தப்பட்ட மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டும். **புதுச்சேரி மற்றும் காரைக்கால்** கல்வி மாவட்டங்களில் உள்ள பள்ளி தலைமை ஆசிரியர்கள் பெயர்ப்பட்டியலில் திருத்தங்கள் இருப்பின் சம்பந்தப்பட்ட இணை இயக்குநர் அலுவலகம் / முதன்மைக் கல்வி அலுவலகத்தில் 10.09.2024 **தேதிக்குள்** ஒப்படைக்க வேண்டும். **பத்தாம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழ் அடிப்படையில் மட்டுமே மாணவரது பெயர் மற்றும் பிறந்த தேதியில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படும்.**

2. பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வெழுதிய பின்னர், அரசிதழில் (Gazette) பதிவு செய்து பெயர் மாற்றம் செய்த மாணாக்கர்களுக்கு மட்டும், பத்தாம் வகுப்பு சான்றிதழில் உள்ளவாறு இல்லாமல் அரசிதழில் உள்ளவாறு பெயரை மாற்றம் செய்துக் கொள்ள அனுமதிக்கப்படும். அவ்வகை மாணாக்கரது பெயர் திருத்தம் கோர அரசிதழின் நகலை கண்டிப்பாக (புதுச்சேரி மற்றும் காரைக்கால் மட்டும் சம்பந்தப்பட்ட இணை இயக்குநர் அலுவலகம்/ முதன்மைக் கல்வி அலுவலகத்தில்) மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டும்.

3. மாணவரது பெயர்ப்பட்டியலில் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு அம்மாணவரின் பெயர்ப்பட்டியல் பக்கத்தில் திருத்தங்கள் குறித்த விவரங்களை குறிப்பிட்டு தலைமையாசிரியரின் கையொப்பமிட்டு சமர்ப்பிக்கவேண்டும்.

4. ஒரு பள்ளியில் மேல்நிலை முதலாமாண்டு (+1) பயின்று, மார்ச்/ஏப்ரல் 2024–இல் மேல்நிலை முதலாம் ஆண்டு தேர்வெழுதிய பின்னர், மாற்றுச் சான்றிதழ் பெற்று வேறொரு பள்ளியில் பன்னிரெண்டாம் வகுப்பில் (+2) சேர்ந்து பயிலும் மாணவரது பெயரை, தற்போது பன்னிரெண்டாம் வகுப்பு (+2)

பயிலும் பள்ளியில் மாணாக்கர் பெயர், பட்டியலில் சேர்க்க இயலும். அவ்வாறு தற்போது +2 பயிலும் பள்ளியின் பெயர்ப்பட்டியலில் சேர்க்க வேண்டுமெனில், +1 மதிப்பெண் பட்டியல் நகல், மாற்றுச் சான்றிதழ் நகல் உள்ளிட்ட ஆவணங்களை மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டும். **ஆனால், அம்மாணவர் ஏற்கனவே +1 பயின்று தேர்வெழுதிய பாடத் தொகுப்பு, பயிற்று மொழி மற்றும் மொழிப்பாடம் ஆகியவற்றில் எக்காரணம் கொண்டும் மாற்றம் செய்ய இயலாது.**

5. **மேல்நிலை முதலாமாண்டு பயின்று +1 பொதுத் தேர்வெழுதிய பள்ளி மாணாக்கரது பெயரை பள்ளி மாற்றுச் சான்றிதழ் வழங்கப்படாத நிலையில் +2 பொதுத் தேர்வுக்கான பெயர் பட்டியலில் இருந்து நீக்கம் (Deletion) செய்திட அனுமதி வழங்கப்படமாட்டாது.**

   **பள்ளியில் மாற்றுச் சான்றிதழ் வழங்காமல் நீண்ட காலம் விடுப்பில் இருக்கும் மாணாக்கரது பெயரை, பெயர்ப்பட்டியலில் இருந்து நீக்கமும் (Deletion) செய்யக் கூடாது.**

   **எனினும் , பள்ளி மாற்றுச் சான்றிதழ் வழங்கப்படாத / நீண்ட காலம் விடுப்பில் இருக்கும் மாணாக்கர் பெயரை இரண்டாமாண்டு பெயர்பட்டியலில் கட்டாயம் நீக்கம் செய்ய வேண்டுமெனில், முதன்மைக் கல்வி அலுவலரின் ஒப்புதல் கடிதத்துடன் அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநரிடம் சமர்ப்பிக்க வேண்டும்.**

6. 2023–2024–ஆம் கல்வியாண்டிற்கு முன்னர் மேல்நிலை முதலாமாண்டு பயின்று பொதுத் தேர்வெழுதி தேர்ச்சி பெற்று / பெறாமல் இடைநின்று தற்போது மீண்டும் பள்ளியில் சேர்ந்து மேல்நிலை இரண்டாமாண்டு (+2) பயின்று வரும் மாணவர்களின் பெயரினை 2024–2025 கல்வியாண்டில் மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்விற்கான பெயர்ப்பட்டியலில் சேர்த்திட தலைமை ஆசிரியர்கள் சம்பந்தப்பட்ட உதவி இயக்குநர் அலுவலகத்தில், அம்மாணாக்கரது மேல்நிலை முதலாமாண்டு (+1) மதிப்பெண் பட்டியல் (Statement of Marks), தற்போது +2 பயிலும் பள்ளியின் எண், பள்ளித் தலைமையாசிரியரின் பரிந்துரைக் கடிதத்துடன் <u>10.09.2024</u>–க்குள் சமர்ப்பிக்கவேண்டும்.

7. மேலும், வேறு மாநிலத்தில் பதினோராம் வகுப்பு பயின்று தேர்ச்சி பெற்ற மாணவர்கள், மத்திய இடைநிலைக் கல்வி வாரிய (CBSE) பாடத்திட்டத்தில் பதினோராம் வகுப்பு பயின்று தேர்ச்சி பெற்ற மாணவர்கள் தற்போது தங்கள் ஆளுகைக்குட்பட்ட பள்ளிகளில் மேல்நிலை இரண்டாமாண்டு (+2) பயின்றால், அம்மாணக்கரின் பெயரினை 2024-2025 மேல்நிலை இரண்டாமாண்டு பெயர் பட்டியலில் சேர்த்திட தலைமை ஆசிரியர்கள் (i) சம்பந்தப்பட்ட மாவட்டக் கல்வி அலுவலரிடம் பெறப்பட்ட இணைச் சான்றிதழ் (ii) பள்ளிக் கல்வி இயக்குநர்/தனியார் பள்ளிகள் இயக்குநர் அவர்களின் அனுமதி ஆணை (iii) புகைப்படத்துடன் கூடிய உறுதிமொழி படிவம் ஆகியவற்றை <u>10.09.2024</u>**-க்குள்** சமர்ப்பிக்கவேண்டும்.

**ஒம்/-**
**இயக்குநர்**

**<u>நகல்:</u>**

அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள், (இடைநிலை மற்றும் தனியார் பள்ளிகள்) } தகவலுக்காக